மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Devotional Norm of Karaikal Ammaiyar in Periyapuranam

G. Kalaiarasi

Guest Lecturer, Government Arts and Science College, Senthamangalam, India

Manuscript ID : **MT127A0067**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 21.09.2022
Revised: 23.09.2022
Accepted: 25.09.2022
Published: 30.09.2022

Pages : 161-166

DOI: 10.5281/zenodo.7372044

ABSTRACT:

Periyapuranam presents the history of the Nayanmars, who were the devotees of Lord Shiva. Karaikal Ammaiyar is one of the Nayanmars among the devotional group. Sekkizhar pays foremost importance to Karaikal Ammaiyar in his writing. The present study would discuss the devotional journey of Karaikal Ammaiyar from her childhood age to old age. Further, it would discuss the transformation of Lord Shiva as a child, when Karaikal Ammaiyar was old and called her as 'Ammaiye'

KEYWORDS:

Devotion, Karaikal Ammaiyar, Lord Shiva, Norm, and Periyapuranam

பெரியபுராணம் செப்பும் காரைக்காலம்மையாரின் பக்தி நெறி

ஞா. கலையரசி,
கௌவுரவ விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேந்தமங்கலம், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அடியவர்களான நாயன்மார்களின் வரலாற்றினைப் பேசும் நூல் பெரியபுராணம். பெரியபுராணத்தில் சேக்கிழார் கூறிய நாயன்மார்களுள் தனியிடம் பிடித்த பெண் நாயன்மார் காரைக்காலம்மையார். காரைக்காலம்மையார் சிவன் மீது குழந்தைப் பருவத்தில் கொண்டிருந்த பக்தி நெறியும், இல்லற காலத்தில் இன்னும் வளர்ந்து அடியார்களுக்கு தொண்டு செய்த பக்திநெறியும், தன்னுடைய இறுதி காலத்தில் சிவபெருமானு மகனாக மாறி 'அம்மையே' என்று அழைக்கப்பட்ட உயர்ந்த பக்தி நெறியும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

பெரியபுராணம், காரைக்காலம்மையார், பக்திநெறி, சிவபெருமான்

முன்னுரை

பெரியபுராண நூல் சைவ நெறியில் இறைவனைத் தொழுது அறுந்தொண்டாற்றிய அடியார்களின் வாழ்க்கையைச் சொல்லும் வரலாற்று பெட்டகம் என்று போற்றப்படுகிறது. பெண் நாயன்மார்களுள் தலைமைச் சான்றவர் காரைக்கால் அம்மையார் என்றால் சாலப் பொருந்தும். இவ்வம்மையார் சிறுவயது முதல் தன்னுடைய இறுதிக்காலம் வரையிலும் சிவபெருமான் மேல் சிந்தை கொண்டு பக்தி செலுத்திய நெறியை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இளமை காலத்தில் பக்தி நெறி

காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதி ஆகும். 'அன்பின் திறத்தால் உலகினைத் தூய்மையாக்குபவர்' என்னும் காரணப்பெயராக இப்பெயர் அமைகிறது. காரைக்காலில் பிறந்த இவர் இளமையிலேயே இறைவன் மீது அளவற்ற பக்தியோடு இருந்த நிலையை,

**'வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வற் றசையறடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெடித்
தணிவில்பெரு மணக்காத றதம்பவரு மொழிபயின்றார்'**

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1718.

என்ற இப்பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. தவழும் நடைப்பழகையிலேயே இறைவனைப் போற்றும் ஆற்றல் பெற்றிருந்தார். சிறுமியர்களுடன் விளையாடும்பொழுது சிவனைப் பற்றிய எண்ணத்திலேயே உறைந்திருந்துள்ளார்.

**'வண்டல் பயில்வன எல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணைய'**

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1719.

என்ற இவ்வரிகளை ஆராயுங்கால் வண்டல் என்பது பெண்கள் விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று. அவ்வாறு விளையாடும்பொழுதும் புனைந்த சடையை உடைய சிவபெருமானையே நினைத்திருந்திருக்கிறார் என்பதிலிருந்து அம்மையாரின் பக்தியின் திறன் வெளிப்படுகிறது. மேலும்,

**"பிறந்த மொழியின்ற பின்எல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் நிறந்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் திகழும் வரும்
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்"**

(**புலவர் தமிழமுதன்** (உ.ஆ), **அற்புத திருவந்தாதி**, பா.எ.1.)

என்ற இவ்வடிகளை நோக்கும்போது காரைக்கால் அம்மையார் இவ்வுலகில் பிறந்து மொழியைப் பேசுவதற்குக் கற்ற நாள் முதல் சிவன் மீது அன்பை வளர்த்து சிவனின் திருவடியைச் சரணடைந்து பக்தி செய்ததை அறிய முடிகிறது.

இல்லற நெறியில் பக்திநெறி

காரைக்காலம்மையாரும் பரமதத்தரும் இணையராகி இல்லறத்தை நடத்தி வந்தனர். இல்லற நெறியைவிட பக்தி நெறியே சிறப்புடையதாக ஓங்கி வளர்ந்துள்ளதை,

'ஆங்கவன்ற இல்வாழ்க்கை அருந்துணையம் அமர்கின்ற
பூங்குழலாய் அவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியவன் புறுகாத லொழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில் வருமனையறத்தின் பண்புவழா...'

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1731.

என்ற பாடல் வரிகள் அழகுடன் செப்புகின்றன.

அடியார்க்கு விருந்தோம்பும் பக்திநெறி

விருந்தினர் என்பார் இக்காலத்தார் கருதுவதும் போல உற்ற உறவினர் அல்லர். எதிர்பாராமல் பசியால் இல்லம் நோக்கி வருபவரே விருந்தினர் எனக் கருதப் பெற்றனர். இக்கருத்தை,

"விருந்தே நானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

(இளம்பூரணார் (உ.ஆ), தொல்.பொருள். நூ.எ.540.)

என்ற தொல்காப்பிய நூற்பாவும்

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்த வர்க்கு"

(அறவாணன் க.ப, (உ.ஆ), திருக்குறள், எ.86.)

என்ற திருக்குறளும் மெய்ப்பிக்கிறது.

காரைக்கால் அம்மையார் தம் வீட்டிற்கு வரும் சிவனடியார்களுக்கு விருந்தோம்பி சிவத்தொண்டு புரிந்து வந்தார். "மண்ணுலகில் இறையாக விருந்தோம்பல் என்னும் அறப்பண்பை மேற்கொண்டு வந்தவர்கள் வானுலகில் விருந்தோம்பப் பெறுவர். பற்றறுத்தார்க்கு பற்றற்றுத்தான் வீடுபேறு தருவான் என்பதை அம்மையார் வாழ்வியல் நெறி வழியே உய்ந்துணரலாம்." (ஆய்த எழுத்து பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், (01-ஜீன்-2019) ISSN: 2278-7550 ப.எ.60.)

காரைக்கால் அம்மையார் சிவனடியார்களைக் குறிப்பால் அறிந்து அவர்களை அன்பாக வரவேற்று தேவையான உணவுவகைகளைச் சமைத்து விருந்தோம்பிய பக்தியின் திறத்தை,

'நம்பரடி யாரணைத்தால் நல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்று நவமணியார் செழுத்துகிறது முதலான
தம்பரிவி னாலவர்கட்குத் தகுதியின் வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீ ழுணர்வுமிக வொழுகுனாள்'

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1731.

என்ற பாடல் வரிகளில் சேக்கிழார் சுட்டுகின்றார். இதன் வழியே காரைக்கால் அம்மையாரின் பக்தி நெறி வெளிப்படுகிறது.

அம்மையாரின் இறையன்பு

காரைக்கால் அம்மையார் சிவபெருமானின் ஐந்தெழுத்தின் பெருமையை,

'அண்பத்தான் ஆதிரையான் ஆலயம் உண்டி கொண்ட
கண்டித்தான் செம்பாற் கமல்'

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1729.

என்ற அடிகளின் வழி காணமுடிகிறது.

இறைவனின் திருநாமமான ஐந்தெழுத்து மந்திரத்தினை இடைவிடாமல் ஓதினால் சிவபெருமானின் அருளைப்பெற முடியும் என்கிறார். மேலும் காரைக்கால் அம்மையார் சிவபெருமானிடம்,

"பிறவாமை வேண்டும் பிறப்பு உண்டேல் உன்னை
யெஞ்ஞான்றும் மறவாமை வேண்டும்"

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1730.

என்று கூறுவதிலிருந்து அம்மையாரின் பக்தியை உணரமுடிகிறது.

பேய் வடிவம் கொண்ட புனிதவதி

பேயுடம்பு என்றவுடன் வாயுவுடம்புடன் கூடித்திரியும் பேய் வடிவமன்று. அவை **"ஐம்பூத சேர்க்கையிலாகிய உடற்கூட்டில் ஏனைய பகுதிகள் மறைய, வாயு ஒன்று மட்டும் மிகுந்து கண்ணுக்குத் தோன்றும் வகையில் திரியும் பாச உடம்புதான் அம்மையார் வேண்டி பெற்றதாகும் மனித உடலினுள் ஏனையவை ஒழித்து எலும்புக்கூடு ஒன்று மட்டுமே காணப் பெற்றதும், காற்றுப் போல் கடிந்து செல்லும் தன்மை வாய்ந்ததும், மண் என்ற ஒரு பூதசெயல் மிகுந்த எலும்பு வடிவாயினுமி,**

களிம்பு நீங்க பொன்னாலான செம்புபோலப் பாசநீக்கித் தூய்மையாக்கப்பட்ட சுத்தமாய உருவம் வாய்ந்ததும், ஆனால் மக்கள் கண்ணுக்குப் புலப்படுவதுமாகிய ஓர் ஒளிப்பெற்ற திருவுடம்பு." (ஆய்த எழுத்து பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், (01-ஜீன்-2019) ISSN: 2278-7550 ப.எ.60.)

பேய் வடிவம் எதற்கு என்றால் இறைவனை மறவாமல் நினைத்துக் கொண்டே இருக்க என்பதை,

'நின் தாள் போற்றும் பேய்வடிவு'

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1350.

என்ற வரியில் பெரியபுராணம் பதிவு செய்கிறது. பேய் உருவம் கொண்ட அம்மையார் தலையினால் நடந்து சென்றதைக் கண்ட பெருமான் புனிதவதியை அம்மையே என்று அழைக்கலானார் என்பதை,

'அங்கணன் அம்மையே என்று அருள் செய் அப்பா என்று
பங்கயச் செய்பொன் பரதம் பணிந்து வீழ்ந்து எழுந்தார்'

- பெரியபுராணம்.காரைக்.பு.பா.1758.

என்ற பெரியபுராண வரிகள் சான்றாய் அமைகின்றன. மேலும் இங்கு அம்மையாரின் உயர்ந்தபட்ச பக்திநெறி வெளிப்படுவதை அறியமுடிகிறது.

முடிவுரை

காரைக்காலம்மையார் இளமைப் பருவம் தொட்டே சிவன் மீது கொண்ட பகுதியையும் தனது பக்தியின் அடுத்த கட்ட வளர்ச்சியாக இல்லற நெறியில் தொண்டு செய்து பக்தியில் உயர்ந்ததையும், தனது பக்தியின் மேன்மையால் இறைவனால் 'அம்மையே' என்று அழைக்கப்பட்டு தெய்வ நிலைக்கு உயர்ந்த நிலையையும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

தொகுப்புரை

1. காரைக்காலம்மையார் பிறந்து மொழிக்கற்ற நாள் முதல் சிவபெருமான் மீது பக்தி கொண்டுள்ளார்.
2. தன்னுடைய இல்லற காலத்தில் சிவபெருமானின் அடியார்களுக்கு விருந்தோம்பல் செய்து தன்னுடைய பக்தியை மேலும் உயர்த்தியுள்ளார்.
3. புனிதவதி தன்னுடைய இறுதி காலத்தில் இறைவனிடம் அம்மையே என்று அழைக்கப்பட்ட உயர்ந்தபட்ச பக்தி நெறியும் விளக்கப்பட்டுள்ளது.

4. பிறவாமை வேண்டும் பிறப்பு உண்டெனில் மீண்டும் இறைவா உன்னை மறக்காமல் இருக்க வேண்டும் என்று வேண்டும் சிறந்த பக்தி நெறியும் அம்மையாரிடம் வெளிப்படுகிறது.

துணைநூற்பட்டியல்

1. அறவாணன் க.ப (உ.ஆ), திருக்குறள், தமிழ்க்கோட்டம், 2, முனிரத்தினம் தெரு, அய்யாவு குடியிறுருப்பு, அமைந்தகரை, சென்னை - 600 029. (2007).
2. ஆய்த எழுத்து, பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், (01-ஜீன்-2019) ISSN: 2278-7550, சைதாபேட்டை, சென்னை - 600015.
3. இளம்பூரணார்(உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை - 600 014. (2011).
4. நடராசன் (உ.ஆ), பெரியபுராணம் மூலமும், உரையும், உமா பதிப்பகம், 2008.
5. புலவர் தமிழ்முதன், அற்புதந்தாதி, முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு, தியாகராய நகர், சென்னை - 17.

REFERENCES

1. Aravanan Ka.Pa(2007), Thirukural, Tamilkottam, 2, Munirathinam Theru, Ayyavu Kudiiruppu, Amanthakarai, Chennai - 29.
2. Aitha Eluthu, Pannathu Tamil Research Book, Saratha Pathipagam, Chennai - 600015.
3. Ilampurannar (2005), Tholkapiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai - 600 014.
4. Natarasan, Periyapuranam Mulamum, Uraium, Uma Pathipagam, 2008.
5. Pulavar Tamilamuthan, Mulai Niliyam, 9, Bharathi Nagar First Street, Thiyagarya Nagar, Chennai - 17.